**செய்தி வெளியீடு எண்: 568** **நாள்: 23.08.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

**எல்காட் இ–மார்க்கெட் –**

**மின்னணு பொருட்கள் ஆன்லைன் மூலம் கொள்முதல்**

அரசுத் துறைகள் ஆன்லைன் வாயிலாக தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த வன்பொருள் மற்றும் மென்பொருட்களை கொள்முதல் செய்வதற்கு ஏதுவாக எல்காட் இ–மார்க்கெட் என்ற இணைய வழி கொள்முதல் முறையை அரசு விரைவில் அறிமுகப்படுத்தவுள்ளது.

மாண்புமிகு தகவல் தொழில் நுட்பவியல்துறை அமைச்சர் டாக்டர் எம். மணிகண்டன் அவர்கள், 29.5.2018 அன்று சட்டமன்றப் பேரவையில் எல்காட் இ–மார்க்கெட் ரூ.30 இலட்சம் மதிப்பில் செயல்படுத்தப்படும் என அறிவித்திருந்தார். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்துகின்ற வகையில் தற்பொழுது எல்காட் இ–மார்கெட் முறை உருவாக்கப்பட்டு பரிசோதனையில் உள்ளது. விரைவில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

எல்காட் இ–மார்கெட் என்ற இந்த இணைய வழி கொள்முதல் முறையில், இணைய வழி மூலம் அரசு துறைகளுக்கு அனைத்து தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த வன்பொருள், மென்பொருள் மற்றும் சேவைகளை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மின்னணு பொருட்களுக்கான ஒப்பந்தப்புள்ளி (டெண்டர்) ஏற்கனவே கோரப்பட்டு, எல்காட் நிறுவனத்தில் பதிவுபெற்றுள்ள விற்பனையாளர்களின் விலைப்பட்டியல் வழங்கப்பட்டிருக்கும். அரசுத் துறைகள் எல்காட் இ–மார்க்கெட் போர்ட்டலில் உள்நுழைவு செய்து விற்பனையாளர்களின் விலைப்பட்டியலை பார்வையிட்டு, தங்கள் துறைக்குத் தேவையான மின்னணு பொருட்களின் விலைகளை ஒப்பிட்டு பார்த்தும், அதன் விவரங்களை அறிந்து கொண்டும், பொருட்களை தெரிவு செய்து கொள்ளலாம். தேவைப்பட்டால்

உத்தேச விலைப்பட்டியல் (Proforma Invoice) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். துறைகள் தங்களுக்கு தேவையான மின்னணு பொருட்களின் கொள்முதல் விலை தெரிந்துள்ளதால் உடனே தங்கள் அலுவலக நடைமுறைப்படி ஒப்புதல் பெற்று, கொள்முதலுக்குத் தேவையான நிதியை எல்காட் நிறுவனத்திற்கு ஆன்லைன் மூலமாக வழங்கலாம். அரசுத்துறைகள் நிதி வழங்கியது முதல் மீதத் தொகை (இருப்பின்) திரும்பப் பெறுவது வரை அனைத்து பரிவர்த்தனைகளும் இணைய வழியாகவே மேற்கொள்ளப்படும். இந்த அணுகுமுறை எல்காட்டில் பதிவு பெற்றுள்ள விற்பனையாளர்களுக்கும் பின்பற்றப்படும். இதனால் அரசுத் துறைகள் மற்றும் விற்பனையாளர்கள் தங்களது பரிவர்த்தனைகளின் நிலையை இணைய வழியிலேயே அவ்வப்போது தெரிந்து கொள்ளலாம்.

அரசுத் துறைகள் தங்கள் துறைக்கு தேவையான கணினி, பிரிண்டர், மடிக்கணினிகள், கையடக்க மடிக்கணினிகள், அலைப்பேசிகள், நகலிகள், கண்காணிப்பு கேமராக்கள், வருடுபொறி (Scanner), வழங்கி (Server), விரலி (Pendrive) போன்ற எலக்ட்ரானிக் மின்னணு சாதனங்களை எல்காட் நிறுவனம் வாயிலாக கொள்முதல் செய்கின்றன. எல்காட் நிறுவனம் அரசுத் துறைகளுக்கு தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த வன்பொருள் மற்றும் மென்பொருட்களை கொள்முதல் செய்து வழங்கும் முகமையாக செயல்படுகிறது. தற்பொழுது அரசுத் துறைகள் எல்காட் நிறுவனத்திடமிருந்து உத்தேச விலைப்பட்டியலைப் பெற்று நிதி ஒப்புதல் பெற்று ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை எல்காட் நிறுவனத்திடம் வழங்குகிறது. அதன்பின் எல்காட் நிறுவனம் துறைகளுக்குத் தேவையான மின்னணு பொருட்களை ஒப்பந்தப்புள்ளி ஏலமுறை மூலம் தெரிவு செய்து, பொருட்களை வழங்குகின்றது.

அரசு துறைகள் தங்களுக்கு தேவையான மின்னணு சாதனங்களை உடனடியாக கொள்முதல் செய்து கொள்கின்ற வகையில் புதிதாக எல்காட் இ–மார்க்கெட் என்ற இணைய வழி கொள்முதல் முறையை தமிழக அரசின் தகவல் தொழில் நுட்பவியல் துறை அறிமுகப்படுத்தவுள்ளது.

எல்காட் இ–மார்க்கெட் இணைய வழி கொள்முதல் முறையில் பணிகள் விரைந்து நடப்பதுடன் ஒருங்கிணைந்த கொள்முதல் மற்றும் வெளிப்படைத் தன்மை உறுதிப்படுத்தப்படுகிறது. தற்பொழுது பரிசோதனையில் (Testing) உள்ள எல்காட் இ–மார்க்கெட் முறை விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**